**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

MCOP.5 of 2023

Civil Case No :: Rw-2

Name :: சுசிலன் ஜான்

Father's/Husband's Name ::

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 02.06.2026

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் அதிகார முகவர் ஆவேன். மேற்படி விபத்து வழக்கு சம்மந்தமாக 3ம் எதிர்மனுதாரர் சார்பாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைதான்.

எங்களது நிறுவனத்தின் பதிவெண் TN 72 BV 4316 என்ற TATA Ace வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் மற்றும் பாலிசி விதிகள் எ.சா.ஆ.1 ஆகும்.

**குறுக்கு விசாரணை (மனுதாரர் தரப்பு)**

நான்தாக்கல் செய்துள்ள பாலிசி முழுமையான காப்பீடு என்றால் சரிதான். வழக்கின் மனுதாரர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். அவர் மேற்படி வாகனத்தில் பயணம் செய்ய அனுமதிக்கக்கூடாத பயணி என்றால் சரிதான். விபத்து சம்மந்தப்பட்ட

உண்மைத்தன்மை எனக்கு எங்கள் நிறுவனம் நடத்திய புலன் ஆய்வு நடத்தியதன் மூலம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த புலன் ஆய்வு அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புலன் ஆய்வு அறிக்கையில் எந்தவிதமான விபத்து விதிமீறலும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் FIR நகலில் சரக்கு வாகனத்தில் டிஜிட்டல் பேனர் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுதாரர் மேற்படி டிஜிட்டல் பேனரை பிடித்துக்கொண்டு போனதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்கள் ஓட்டுநருடன் சேர்த்து உதவியாளரோடு 2 பேர் என்றால் சரிதான். என்னுடைய எதிருரையிலோ பிரமாண வாக்குமூலத்தில்லோ காயம் பட்ட நபர் டிஜிட்டல் பேனரின் உரிமையாளர் என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்டம் பிரிவு 147 ன் படி சரக்கின் உரிமையாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ காப்பீடு நிறுவனத்தில் இழப்பீடு கோரலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அனுமதிக்கப்படாத பயணிக்கு பொருந்தாது. சரக்குகளின் உரிமையாளர் அனுமதிக்கப்பட்ட பயணி என்றால் சரியல்ல. மனுதாரர் சரக்கின் உரிமையாளர் என்பதால் எங்கள் காப்பீடு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தமிழ்நாடு மோட்டார் வாகன விதிமுறைகளின் படி சரக்கு வாகனத்தில் ஓட்டுநர் தவிர 6 கூலிகள் பயணம் செய்யலாம் என்றால் சரியல்ல. விபத்தை பொறுத்து பாலிசியை பொறுத்து எந்தவித விதிமுறை மீறல்களும் இல்லை என்பதால் எங்கள் நிறுவனமும், 1, 2 எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கூட்டாக மனுதாரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.